1981 மார்ச் 2]

திரு. பா. ரா. தாமஸ் : ஊக்க ஊதிய உயர்வு வழங்க முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்திருப்பதால், அறுவை சிகிச்சை செய்து கொண்ட நபர்களுக்காவது தற்போது கொடுக்கப்படும் தொகையை அதிகரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதுபோன்ற உத்தேசம் தற்போது இல்லை.

Teachers of Municipal Higher Secondary School, Karur.

* 107 Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the allowance paid to the Inducted Teachers, for handling Higher Secondary Classes in the Municipal Higher Secondary School, Karur, has been stopped from November 1979 ; and

(*b*) if so, the reasons for such stoppage?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மருத்துவப் பிரிவையும், நல்வாழ்வுப் பிரிவையும் சீரமைத்தல்

* 108 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்தையும் இரு மருத்துவ மாவட்டமாகப் பிரித்து, மருத்துவப் பிரிவிலும், நல்வாழ்வுப் பிரிவிலும் நிபுணர்களை நியமனம் செய்து சீரமைக்க வேண்டுமென்று, அரசுக்கு முறையீடு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இது சம்பந்தமாக அரசுக்கு முறையீடு எதும் வரவில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.